REGD. No. M. 6311

'PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 170

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு :	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை : மார்கழி 14உ செவ்வாய் (29—12—53) ★ ★ ★ வெளியூர் : மார்கழி 15உ புதன் (30—12—53)

'அறிவு, ஆற்றல் படையாக வரவேற்பு கூட்டங்கள் அமைய வேண்டும்'

—(:)—

ஆச்சாரியார் ஜனநாயக வாதியாக இருந்தால்

வழக்காட விடுத்த அன்பழைப்பை ஏற்றிருக்க வேண்டும்'

—(:)—

'சென்னை மாநிலமே, எனக்கு 2 லட்சம் பானை-2 லட்சம் கோரைப்பாய் அனுப்பு என்று சோவியத் நாடு கேட்குமா?'

—(:)—

பெத்துநாய்க்கன்பேட்டை வரவேற்புக் கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன்

சென்னை, டிச 29—

"பிரிந்த ஆந்திர மாகாணம் சேர்த்து, 1951—கல்வி இலாகா கணக்குப்படி, இந்த நாட்டிலே, 1-வது வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரை பள்ளிக்கூடத்திலே சேர்ந்த குழந்தைகளின் எண்ணிக்கை 80 லட்சம் என்றால், இந்த எண்ணிக்கை, 5-வது வகுப்புக்கு வரும்போது, 40 லட்சத்துக்குக் குறைந்து விடுகிறது. மற்ற 40 லட்சம் குழந்தைகள், குப்பைமேட்டிலோ, குளத்தங்கரையிலோ—மாடு மேய்த்தோ, தண்ணீர்ப் பாம்பு பிடித்தோ திரிவர். மற்ற 40 லட்சம் பேரில், முதல் பாரம் வரும்போது இருப்பவர் எண்ணிக்கை 6 லட்சந்தான்! மீதி 74 லட்சம் பேர், ஆச்சாரியார் சொல்கிறபடி குலத் தொழிலோ, குடிசைத் தொழிலோ செய்யப் போதாதா? கொஞ்சம் கொஞ்சம் வளருகிற அந்த 6 லட்சம் பேரையும் பாழ்படுத்தத்தானே, ஆச்சாரியாரின் திட்டம்? இதனால், இந்த நாடு உருப்படுமா?'

"ஆச்சாரியார் கூற்றுப்படியோ, அல்லது காந்தியார் கருத்துப்படியோ, இந்தக் குடிசைத் தொழில் திட்டம்—புதிய கல்வித் திட்டம், நல்லதென்றே வைத்துக்கொள்வோம். அந்த 80 லட்சம் மாணவச் சிறுவர்களும் பானை செய்து, கூடை முடைந்து, தக்ளி சுற்றி, கருமான் வேலை செய்து, தங்களின் கைத்திறனையும், மெய்த்திறனையும் காட்டிப் பொருள்கள் செய்வதாகவே வைத்துக் கொள்வோம்: அதுபோது, அமெரிக்கா, ஏ, சென்னை மாநிலமே! எனக்கு 2 லட்சம் பானை அனுப்பு,' என்று கேட்குமா? ரஷ்யா, 'எனக்கு ஒரு கோடி கோரைப் பாய் அனுப்பு,' என்று சென்னையைக் கேட்குமா? உலக மார்க்கெட், நமக்கு இதனால் கிடைக்குமா?—என்றுதான் மதிப்பிற்குரிய ஆதரவாளர்களைக் கேட்கிறேன்.

"ஆச்சாரியாருக்கு, அமெரிக்காவிலிருந்துதான் மோட்டார்கார் இறக்குமதியாகும்; அவருடைய மூக்குக் கண்ணாடிக்குப் 'பிரேம்' பெல்ஜியத்திலிருந்தோ, சுவிட்சர்லாந்திலிருந்தோதான் இறக்குமதியாகும்; யு.எஸ்.ஏ. பேனாவைத்தான் அவர் பிடித்துக் கொண்டிருப்பார்; கடிகாரமும 'சுவிஸ்' ஸிலிருந்து வந்து கொண்டுதான் இருக்கும்;—நாம் மட்டும் கைராட்டையைச் சுற்றிக் கொண்டேதான் இருப்போம்!—எனவேதான், நாம் கூறுகிறோம்—'கொஞ்சநஞ்சம் நமக்குள்ள விஞ்ஞான வசதியையும் ஒழிக்க, நமது நேரத்தையும் நிலைமையையும் பாழாக்க, அவர், இந்தப் புதிய கல்வித் திட்டத்தைப் புகுத்தியிருக்கிறார்'—என்று!

"'என்னைக் கேட்டால், எட்டுக் கல்வியே வேண்டாமென்பேன்; குலத் தொழில்தான் முக்கியம்.' என்று அவர் கூறினார் படித்த வண்ணானைக் காட்டிலும், படிக்காத வண்ணான் வெளுப்பது வெண்மையாயிருக்கும் என்றாரே! இப்போது சுருதி இறங்கி இருக்கிறது மாற்றாரின் பழிச் சொல்லையும், எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, சென்ற 3 மாதகாலமாக நாம் நடத்திய போராட்டத்தின் விளைவுதான் இது."

"நாம் பிறக்கிற நேரத்திலே அழுதுகொண்டுதான் பிறக்கிறோம், ஒரு இலட்சியத்துக்காக, தூக்கு மேடையிலோ, சிறையிலேயோ, சாகும்போது, சிரித்துக்கொண்டே சாகலாம்! கோழை அழுதுகொண்டு இறப்பான்! 'ஒரு அடிப்படைத் திட்டம் அமைய, அதன்மீது எழில் கொள்கை நிலவ, பாடுபட்டேன்; நியாயத்திற்குப் பாடுபடுகிறேன்; நிமிர்ந்து நடப்பேன்; என்னுடைய கொள்கையை எவரும் மறுத்ததில்லை—மாறாக வணங்கினர்,' என்ற அறிவுப் படையாக, ஆற்றல் படையாக அனைவரையும் ஆக்கும் போர்க்கோட்டமாக, இந்த வரவேற்புக் கூட்டங்கள் அமைய வேண்டும்!"

—என்று, 26—12—53-ல், சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை 8-வது வட்டம் தி. மு கழகச் சார்பில் நடைபெற்ற தலைவர்கள் வரவேற்புக்கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசுகையில், தோழர் நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

(3-ம் பக்கம் பார்க்க)

கல்லக்குடி வழக்கு

சம்பந்தப்பட்ட தோழர்கட்கு

★

கல்லக்குடி வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்களுக்கு அறிவிப்பது:

"1—1—54 அன்று, குற்றஞ் சாட்டப்பட்ட அனைவரும் கோர்ட்டுக்கு வர வேண்டுமென்று சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் விரும்புவதால் அனைவரும் அன்று காலை 11-மணிக்கு திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு தவறாது வரவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்," என, ஏ. பி. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

வானளாவ உயர்ந்துள்ள நம்மை வாய்ச்சொல்லால் வீழ்த்த முடியாது

—:x:—

ஆபிரகாம் லிங்கன் கண்ட பாதையில்தான் தி. மு. கழகம் செல்லுகிறது

தி. மு. கழக ஆண்டு விழாவில் - தோழர் கண்ணதாசன் சொற்பொழிவு

சென்னை, டிச. 27—

"அன்று—அமெரிக்காவுக்கு விடுதலை வாங்கித்தந்த ஆப்ரகாம் லிங்கன், மக்களின் உணர்ச்சியை மையமாக வைத்துத்தான் வெற்றி பெற்றான். அவன் எந்த விடுதலை உணர்வை வெள்ளமாகப் பெருக்கினானோ, அதைத்தான் இன்று நாம், நம் மக்களிடையே தூண்டுகிறோம; ஆகவேதான், நம் பக்கம் மக்கள் படை திரளுகிறது.

'ஓமந்தூர் ரெட்டியாரோ, குமாரசாமி ராஜாவோ, அன்று, காமராசரோ முதன் மந்திரியாயிருந்திருந்தாலும், நமது போராட்டங்களால உண்டான மக்களின் எதிர்ப்புணர்ச்சிக்கு மதிப்பளித்து, பதவியிலிருந்து விலகியிருப்பர்—தமிழனுக்கு இயற்கையாக உள்ள மானமுள்ள காரணத்தால்; ஆனால், ஆச்சாரியார் போக மறுக்கிறார்—காரணம், நான் சொல்ல விரும்பவில்லை.

"இனறு, நகரசபைகளிலே, 'அண்ணாதுரை வேண்டுமோ—ஆச்சாரியார் வேண்டுமோ?' என்ற கேள்விக்கு, 'அண்ணாதுரையே' என்ற பதில்! நாளை சட்டசபையிலேகூட இம்முடிவை எதிர்பார்க்கலாம்! இதற்கு வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் காரணம், நமது கழகம் ஒரே குடும்பமாயிருப்பதால்தான்; அந்தக் குடும்பத்தில் நீங்களும் ஏன் பங்கு பெறக்கூடாது?"

—என்று, சென்னை இராயப்பேட்டை 37-வது வட்ட தி மு. கழக ஆண்டு விழாவில் பேசும்போது, தோழர் கண்ணதாசன் கூறினார்.

இன்று மாலை 6 மணிக்கு, சென்னை இராயப்பேட்டையில், 37-வது வட்ட தி. மு. கழக மூன்றாம் ஆண்டு விழா நடைபெற்றது. 37-வது வட்ட தி. மு கழகச் சார்பில தோழர் மு. கருணாநிதிக்கு அப்போது ஓர் வரவேற்பும் அளிக்கப்பட்டது. திராவிடத் தாய்மார்கள் சார்பிலும், வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டதோடு, 'கைத்தறி ஆடையும் தோழர் கருணாநிதிக்கு அளிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு, தோழர் என். சுந்தரம் தலைமை தாங்கினார். தலைவரின் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் வெற்றிவீரன், விஇளஞ்சேரலாதன் ஆகியோர் பேசினர்.

தோழியர் இசைச் செல்வி, ஜி. சன்தா, கூட்டத் துவக்கத்தில் இயக்கப் பண் பாடினார்.

அடுத்தபடியாகப் பேசிய தோழியர் அலமேலு அப்பாதுரை, 'திராவிட நாடு திராவிடருக்காகும் வரையில் ஓயாது—ஒழியாது நாம் போராடிக் கொண்டே இருப்போம் என்றும், அடுத்துவரும் போராட்டங்களில் தாய்மார்கள் படைதான் தலைமை தாங்கும் என்றும், இதற்காக இப்பொழுதிருந்தே திராவிடத் தாய்மார்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்," என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து, தோழர் கண்ணதாசன் அவர்கள் பேசினார்:

"ஜூலை 15-க்குப் பிறகு, பட்டி தொட்டிகளிலுள்ள இளைஞரெல்லாம் வீரம் பெற்றுவிட்டனர்; பாரெங்கும் நம கொள்கைகள் அறிவிக்கப்பட்டன; ஆயிரம் பேருள்ள கிராமங்களிலெல்லாம் நமது கொடிகள் பறந்தன; நம் கூட்டம் என்றால், மக்கள் திரளும் நிலைமை ஏற்பட்டது; நம்மை பற்றி முன்பு சிந்திக்க நேரமில்லாதவர்கள்—சிந்திப்பது அவசியமற்றது என்று கருதியவர்கள்—சிந்திப்பது தங்கள் கௌரவத்திற்கு இழுக்கானது என்று நினைப்பவர்கள் எல்லாம் இன்று நம்மைப் பற்றி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.வின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 29—12—1953 செவ்வாய்

சிரிப்பும் - சீற்றமும்!

காஷ்மீர் பண்டிதர் - இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், இரண்டு தினங்களுக்குமுன், பாடியாலா நகருக்கு முப்பத்தைந்து கல் தொலைவிலுள்ள பாதேகபார் சாயிப்புக்குச் சென்றிருக்கிறார்.

அது சிக்கியர்களின் புனிதமான இடங்களில் ஒன்றாகும். 1704-ம் ஆண்டில், மொகலாய அரசர்களால், குரு கோவிந்த சிங்கின் இரு பிள்ளைகள், கல்லாலடித்துக் கொல்லப்பட்டது அந்த இடத்தில்தான் என்று நம்பப்படுகிறது.

அந்த இடத்திற்கு பிரதமர் நேரு, தமது ரத, கஜ, துரக பதாதிகளுடன் சென்றிருக்கிறார் அக்கிரமத்திற்குப் பலியான தாகச் சொல்லப்படும் இருவர்களுக்கு வீரவணக்கம் செய்யச் சென்றார் என்றும், பேசச் சென்றார் என்றும், அவ்விடத்திற்கு நேரு சென்றதைக் குறித்து, முரண்பட்ட செய்திகள் தரப்பட்டுள்ளன.

எதிர்பாராவகையில் வீரவணக்கம் செலுத்த அங்கு பிரதமர் சென்றதாக இருந்திருக்குமானால், அங்கு பல ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருக்க ஒரு துளி நியாயமும் கிடையாது. நேருவின் போக்கில் அதிருப்தி கொண்ட எதிர்ப்பாளர் கூட்டமும், முன்னேற்பாட்டோடு அங்கு குழுமி இருந்திருக்கவும் முடியாது. எனவே, பிரதமர் அவ்விடத்திற்குச் செல்லப் போவதும், அங்கு பேசப் போவதும், முன்கூட்டியே பகட்டாக விளம்பரப்படுத்தப் பட்டிருக்கிறது என்பது விளக்கமாகிறது.

'குடியரசுத் தலைவர் ஆட்சியை வாபஸ் வாங்கு!'

'பெப்சிய சர்க்கார் ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இன்னல்களைக் களைக!'

'பஞ்சாப் மொழிவழி மாநிலத்தை உடனடியாக உருவாக்குக!'

மேற்குறித்த மூன்று கோரிக்கைகளையும் கொண்ட சுவரொட்டிகள் அங்கு ஒட்டப்பட்டிருந்தன.

'சீக்கியர் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள்—இல்லையேல், பண்டிதரே திரும்பிப் போங்கள்!'

என்ற தலைப்பிட்ட துண்டு அறிக்கைகள், கூட்டத்தில் வினியோகிக்கப்பட்டன.

அப் புனிதமான ஆலயத்தை நெருங்கும்பொழுது பண்டிதர் சென்ற 'கார்' மறிக்கப்பட்டு, 'எங்களுக்குப் பஞ்சாபி மொழி மாநிலம் தேவை.' என்று எதிர்ப்பாளர்கள் கூறியிருக்கின்றனர். அதுவுமன்றி, 'புனிதமான குருத்துவாரிலிருந்து அரசியல் பேசாதீர்,' என்றும் அறிவித்துள்ளனர்.

ஆலயத்திற்கு முன்பு எழுந்து நின்று பேச வாய் திறந்தார் பண்டிதர். சீக்கியத் தலைவரான மாஸ்டர் தாரா சிங் குறுக்கிட்டு "சில அடிகள் தொலைவில் நின்று கொண்டு 'பண்டிதர் நேரு பேசுவதை நான் அனுமதிக்க மாட்டேன்' எனக் கத்தி இருக்கிறார்."

அவருடைய தொண்டர் படையினர், மொழிவழி மாநிலம் தேவை எனக் கூச்சலிட்டிருக்கின்றனர்.

பண்டிதர் வாய் திறக்கவில்லை—முடியவில்லை!

சில அகாலி தொண்டர்கள், கூட்டத்தை முட்டித் தள்ளிக்கொண்டு பண்டிதரை நெருங்கவும் முனைந்துள்ளனர்.

'பிரதமர் பண்டிதரையும், பெப்சு ராஜப் பிரமுகரையும் பாதுகாப்புப் போலீசார் வளைத்துக்கொண்டு வெளியேற்றினர்.' 'எதிர்ப்பாளர்கள் கூச்சல் இட்டுக்கொண்டு இருந்தபொழுது இருவரும் வெளியேறினர்.'

'சில வார்த்தைகள்கூட பேச முடியாது பிரதமர் நேரு, சிரித்துவிட்டு, குருத்துவாரை விட்டு அகன்றார்.'

காஷ்மீர் பண்டிதர் இன்று, இந்தியத் துணைக் கண்டத்தில் நம்மைப்போன்ற வெறும் சாதாரண வாக்காளர் அல்ல இந்தியாவின் 'முடிசூடா மன்னர்!' 'வைத்தால் குடுமி சிரைத்தால் மொட்டை' என்ற செருக்குள்ளம் படைத்த இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர்!

அவரை, ஒரு சாதாரணமான சீக்கியக் குடிமகனும் மாஸ்டர் தாராசிங், 'பேசாதே!' என்று கட்டளையிடுகிறார்.

பிரதமர் ஜவகர் சிரித்துக் கொண்டே, மோன நிலை பெற்று, போலீஸ் உதவியுடன் வெளியேறுகிறார்—இல்லை—வெளியேற்றப்படுகிறார். பரிதாபம்!

கூட்டத்திலே அமளி! ஆயுதம் தரித்த போலீசின் பலத்த பாதுகாப்பு! வளையம்போல பாதுகாப்புப் படை பிரதமரை காவல் காத்துக் கொண்டிருக்கும் திருக்கோலம்! இச்சூழ்நிலையில், ஒரு சாதாரண வாக்காளர் 'பேசாதே!' என்று கட்டளை இடுகிறார்!

புல் தடுக்கினாலும், படமெடுத்தாடும் பாம்புபோல், சீறும் பண்பில் தோய்ந்து உரம் பெற்றுள்ள பண்டிதர் 'பேசாதே!' என்று கோபமாகக் கிளம்பிய ஒருவரின் குரலைக் கேட்டு சீற்றம் கொள்ளவில்லை—மாறாக சிரிக்கிறார்!

பண்டிதரின் வாழ்க்கை வரலாற்றில் சுவைமிக்க கட்டம்! காணத் தகுந்த காட்சி! ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தவராகத்தான் பண்டிதர் அப்பொழுது இருந்திருப்பார்!

இது ஒரு படம்! நாம், நமது நெஞ்சில் இருத்துவோம்!

அக்டோபர் இரண்டாம் தேதி, இதே பிரதமர் பண்டித நேரு சென்னை வந்தார். நமது கழகத்தினர், பண்டிதரின் 'நான்சென்ஸ்' பேச்சிற்காக மனம் நொந்து 'கருப்புக் கொடி' காட்டினர், கண்ணியம், அமைதி, கட்டுப்பாடு ஆகிய மூன்றுக்கும் இழுக்கு நேரிடாத வகையில்!

ஒருவருக்குள்ள அதிருப்தியைக் காட்ட 'கருப்புக் கொடி' காட்டுவது மக்களாட்சி முறையில், மகாத்மா புனிதமானதாக உபதேசித்தவரால் ஒருமிக்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசியல் திட்டத்தினால் அரண் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு!

நமது தி.மு. கழகம் அமைதியாகக் காட்டிய கருப்புக் கொடி நிகழ்ச்சியைச் சீர்குலைக்க, காங்கிரஸ் கலகபதிகள் ஏவலால், காங்கிரஸ் களபதிகள் நமது அணியில் புகுந்து தடி கொண்டு தாக்கிக் கலகம் விளைவித்தும்கூட, நமது அறப்போர்ப் படைவீரர்கள், ஆத்திரத்திற்கு அடிமையாகாமல் கடமையை வெற்றியாக நிறைவேற்றியுள்ளனர். வரலாற்றில், பொன்னெழுத்துக்களால் எழுதத் தகுந்த சம்பவம்.

இதைத் தொலைவிலே இருந்து கண்ட பிரதமர் நேரு என்ன செய்தார்?—சிரித்தா சென்றார்! இல்லை! முகத்தைச் சுளித்துச் சென்றார்! உள்ளத்தை எரிமலை ஆக்கிக் கொண்டார்! [illegible] கட்டளையிட்ட கான்யூட் மன்னர் மன்னன்போல் கனக் குரல் கொண்டு கூவினார்!

சிரிக்கவில்லை—மாறாக—தம்மை வனவிலங்கின் நிலைக்குத் தாழ்த்திக் கொண்டார்!

திராவிடரை, 'ஆட்டு மந்தை' என்று கொண்டும் தம்மை மிருகேந்திரன் என்று மதித்துக் கொண்டும் 'காட்டுமிராண்டிகள்' என்று கர்ஜித்தார்—கனல் கக்கினார்—மறைந்த மோதிலால் நேருவுக்கும், மறையாத மாசைத் தேடிக் கொடுத்தார்—பிரதமர் நேரு!

நமது கழக அறப்போர் படையினர் எவரும் மேடை அருகிலும் கருப்புக் கொடியுடன் செல்லவில்லை! படைத் தளபதி எவரும் மேடை அருகில் நின்று, மாஸ்டர் தாராசிங் போன்று, 'பேசாதே!' என்று கட்டளை இடவில்லை!

ஆனால், இவ்வளவு அமைதியாக, சட்ட வரம்புக்குக் கட்டுப்பட்டு காட்டப்பட்ட கருப்புக் கொடி கண்டு, நேரு சிரித்துச் செல்ல வேண்டியதிருக்க, சீற்றங்கொண்டு, ஆம் செந்தேள் ஒரு கணத்தில் கொட்டினவர்போல், சிந்தை குழம்பி, திராவிடப் பெருங்குடி மக்களைப் பற்றி தாம் [illegible] வரலாற்றையும் மறந்து 'காட்டுமிராண்டிகள்—இல்லை—அவர்களிலும் கடைகெட்டவர்கள்' என்று, வாய் காக்காமல் சொல்லிழுக்குப்பட்டுச் சோகாத்து நின்றார் இந்தப் பிரதமர்!

இந்தச் சம்பவமும் நேருவின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு கட்டம்! தீட்டிப் பார்க்கத் தகுந்ததோர் படம்!

★

இந்த இரண்டு படத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்லுகிறோம்—மானம் விற்று வயிறு வளர்த்துப் பழகியுள்ள 'அனுமந்த' ஆசிரியர்களை அல்ல—திராவிடப் பெருங்குடி மக்களை; அன்புள்ளம் கொண்டுள்ள பார்ப்பனக் குடிம் பிறந்தவர்களை!

மனிதத் தன்மை இழந்து, எல்லா சட்ட வரம்புகளையும் கடந்து ஆர்ப்பாட்டம் செய்து, 'பேசாதே' என்று உரிமையைக் குலைத்து, பேசவிடாமல் திணறடித்தவர்களிடத்தில், பண்டிதர் நேருவுக்கு சினம் ஏற்பட்டிருக்க வேண்டும்! ஆனால், ஏற்படவில்லை—ஏன்?

—சிரிப்பு தோன்றுகிறது! சிரிப்பது போல் நடிக்கிறார்!—ஏன்?

'காட்டுமிராண்டிகள்' என்று சொல்லத் தகுந்தவர்களை, அப்படி ஒன்றும் சொல்லாமல், தவஞானியாக வெளியேறி இருக்கிறார் பண்டிதர்!—ஏன்?

சட்ட எல்லைக்கோட்டுக்குள் நின்று, அமைதி காத்து, தங்கள் எதிர்ப்பைக் காட்டிய திராவிடர்கள் செயல், இந்த நல்லவர்—நாகரிகமானவர் கண்ணுக்குக் கடூரமாகத் தெரிந்திருக்கிறது — 'காட்டுமிராண்டிகளிலும் இழிந்தவர்கள்' என்று சொல்ல வேண்டிய அளவுக்குத் துணிவும், நினைப்பும் ஏற்பட்டு இருக்கிறது.

அங்கே அச்சம் சினத்தை மறைத்துக்கொண்டு சிரிக்கச் செய்திருக்கிறது பிரதமர் ஜவகரை! இங்கே அலட்சியம் வாயில் வந்தபடியெல்லாம் ஆணவங் கொண்டு பிதற்றச் செய்திருக்கிறது பண்டிதர் நேருவை!

இந்த இரண்டு நிகழ்ச்சியிலும் மறைந்து கிடக்கும் உண்மையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் பொதுமக்கள்! சில எழுத்துக்கூலி 'ஆரியக் அனுமந்த'களால், இந்த உண்மையை அறிந்து கொள்ள முடியாது. அவர்கள், வடநாட்டு ஏகாதிபத்தியத்தால் வளமான வாழ்வு பெற்று, ஐந்தாம் படை வேலைக்கென்றே திராவிடத்தில் சஞ்சரிப்பவர்கள்! அதுபற்றி நாம் கவலை கொள்ளத் தேவை இல்லை.

இவ்வளவு அமர்க்களங்கள் அங்கு நடைபெற்று இருக்கிறதே, போலீஸ் பாதுகாப்புப் படையினரின் திருவிளையாடல் ஏதாவது நடைபெற்றனவா என்றால், அதுதான் கிடையாது. யூனியன் மந்திரியின் கார் கலவரால் அடிக்கப் பட்டு இருக்கிறது. 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று அந்தச் சீக்கிய மந்திரி ஒப்புக்கொண்டிருக்கிறார்!

போலீஸ் தடியடி கிடையாது! துப்பாக்கிக் குண்டு சத்தம் கேட்கவில்லை! எவராவது கைது செய்யப்பட்டனரா, இல்லை! பிரதமரை பேசாது தடுத்து நிறுத்திய 'மாஸ்டர்' கூட, இன்னமும் சுதந்திரப் புருஷராகத்தான் உலாவிவர உரிமை பெற்று இருக்கிறார்!

அங்கு கொடிய ஆயுதம் தாங்கிய அகாலி இளைஞர் கூட்டம், குறிப்பிட்ட ஒரு இடத்தில் கூடிக்கொண்டு, அவ்வழியே வருபவர் போவோரை மிரட்டியதாகச் செய்தி தரப்பட்டிருக்கிறது. அவர்களைக் கலைக்கப் போலீஸ் முன் வரவுமில்லை! அவர்களில் எவரும் கைது செய்யப்படவுமில்லை! தூத்துக்குடி சதி வழக்கு போன்ற வழக்கு ஜோடிக்க பெப்சு ராஜப் பிரமுகர் முன்வரவுமில்லை!

இவ்வளவு அமளியைக் கண்டும், நேரு, ராஜப் பிரமுகரைச் சோதித்துக் கொள்ளவில்லை. இங்கு சென்னையில் கூறினதுபோல் 'ராஜப் பிரமுகர் அகாலி எதிர்ப்பாளர் விஷயத்தில் இலகுவாக நடந்துகொள்ளுகிறார்—அதை மாற்றிக்கொண்டு, கடுமையாக நடந்துகொள்ள வேண்டும்'. என்று நேரு அங்கு கூறவும் இல்லை.

அவ்வளவு அமர்க்களத்தைக் கண்டும் பண்டிதர் 'கம்சிப்' என்று வாயை இறுக மூடிக்கொண்டு டில்லி திரும்பி இருக்கிறார்!

ஆனால், இங்கோ...!

எதற்கெடுத்தாலும் போலீஸ் குண்டாந்தடியை ஏவியும் துப்பாக்கி கொண்டு மக்களைச் சுட்டு வீழ்த்தியும், எதிர்ப்பாளர் மீது பொய் வழக்குகள் தொடுத்துப் பழி வாங்கியும், அறத்தின் நீங்கிய ஆட்சி நடத்திவரும் ஆச்சாரியாருக்கு 'இலகுவான ஆட்சி நடத்துகிறார்' என்று அத்தாட்சிப் பத்திரம் அளித்திருக்கிறார், நேரு!

கொடிய அடக்குமுறைகளுக்குத் தூபமும் போட்டிருக்கிறார், நாகரீகம் மறந்து வாழும் இந்தியப் பிரதமர் கனவான்!

இதையும் சிந்திக்க வேண்டும் வாசகர்கள்!

கூட்டத்திலே இரண்டு லட்சம் மக்களாம்! மாஸ்டர் தாராசிங்கும் அவருடைய 'சில' அகாலி சீடர்களும், கூட்டத்தில் நேருவைப் பேசவிடாமல் திணறடித்து இருக்கிறார்கள்! அற்புதம்தான்!

பத்திரிகை புகைப் படம் பிடிப்பவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் வைத்திருந்த புகைப் படக் கருவிகளும், எதிர்ப்பாளர்களால் பிடுங்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று, செய்தி தரப்பட்டிருக்கிறது.

சிலர் கலகம் செய்வதை, பல்லாயிரக்கணக்கானவர் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கின்றனர்! கலகக்காரர்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமே, 'பெரிய மனித'ரின் பேச்சைக் கேட்க வேண்டுமே என்ற எண்ணம், அந்த ஆயிரமாயிரம் மக்களுக்குத் தோன்றவில்லை! அருமையான போக்கு!

நல்லகாலம் அங்கு எந்த மார்வாடியும் இல்லைபோல் இருக்கிறது, பெரிய தடியில் காங்கிரஸ் கொடியைச் சொருகி வந்து, எதிர்ப்பாளர்களைத் தாக்க, காங்கிரஸ் களபதிகளுக்குத் தாகசாந்தியளிக்க! அல்லது சீக்கியர்களில், சென்னையில் கிடைத்ததுபோல் கூலிக்கு மாரடிக்கும் 'களபதிகள்' கிடைக்கவில்லையோ என்னவோ?

பண்டிதர் பெரிய மனிதரோ இல்லையோ, அவரை ஒரு சாதாரண குடிமகன் என்று வைத்துக்கொண்டு பார்த்தாலும், அவரைப் பேச விடாமல் செய்ததும், அளவுகடந்து அகாலியர்கள் நடந்துகொண்டதும் காட்டுமிராண்டிச் செயலேயாகும். இந்த வெறிச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசியலில் எவ்வளவு கருத்து வேற்றுமை இருந்தபோதிலும், இத்தகையக் காட்டுச் செயலை, நமது தி. மு. கழகம் எப்பொழுதும் கண்டித்து ஒதுக்கியே தீரும் என்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

நெடுஞ்செழியன் பேச்சு முழு விவரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"படை பலம் உடையோர், பண பலம் பெற்றுள்ளோர், பாராளுமன்றத்திலே பதவிகளை பெற்றுள்ளோர், பதவிப் படிகளின் மீது ஏறித் தாண்டியவர்கள் கூறினர்—'நாடு என்பதைத் தான் நம்பிக்கொண்டிருக்கிறது; எனவே, தி. மு. கழகத்தார் கூட்டம்போட்டால் அங்கே போகாதே'—என்று!

"மந்திரிகளிலிருந்து, சாதாரண காங்கிரஸ் உறுப்பினர் வரையிலே சொல்லியும் கூட, இவ்வளவு பெரு மக்கள் இலட்சக் கணக்கிலே இங்கு கூடியிருப்பானேன்? ஆண்டவனின் அருளா? மந்திரி வித்தையின் மகிமையா? ஆட்சிப் பீடத்திலே இருக்கிற நீங்கள் தடுத்தும், பொது மக்கள் திரளுகின்றனர் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்தில், 'ஒரு உயிர் ஓட்டம்' இருக்கிறதென்பது தானே பொருள்?

"இக்கூட்டத் தலைவர் தோழர் சி. ஆர். பரமசிவம், ஒருபோது காமராஜர் கூட்டங்களைக் கலக்க முயன்றவராவர்—ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், தி. மு. கழகம். சேர்க்க நரம்பு உடையவர்களை, நைந்த நரம்பு படைத்தவர்களாக மாற்றும்! கூனர்களை நிமிர்த்தும்! இன்று நம்மை வசை பாடும் காங்கிரஸ் நண்பர்கள் நிச்சயம் ஒரு நாளைக்கு வாழ்த்துவர்! இல்லாதும் சொல்லாதும் நம்மை அவட்டவர்கள், நிச்சயமாக அவர்களே, நாளை, நமக்கு அணிவிக்கக் சந்தன மாலைகளைத் தாங்கி வருவர். காங்கிரஸ் நண்பர்களுக்கு இன்னமும் 'பக்குவம்' ஏற்படவில்லையென்றால், நாம் பரிதாபப்பட வேண்டியவர்களாகிறோம். மாறவே முடியாதவர்களல்ல அவர்கள் — மாறக்கூடியவர்களே தான்.

"தம்முடைய எதிர்காலத்தில் நம்பிக்கையையும், தம்முடைய எதிர்காலச் சந்ததியின் உயர்வைப் பற்றிய எண்ணத்தையும் கொண்டிருப்பவன் இதயத்தை, தி. மு. கழகம் தட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

"நம் நாட்டைவிட மிக மிகச் சிறிய நாடுகளெல்லாம் விடுதலை பெறுவதாக அறிகிறோம். சாதாரண பாலைவனமாக இருக்கும் நாடுகளெல்லாம் தங்களின் தேவைகளுக்கு, உலக மூலை முடுக்குகளைத் தேடி, பொருள் சேர்த்துத் தனித்து வாழ்வதாக பத்திரிகையிலே படிக்கிறோம்.

"வளமில்லா நாடுகளெல்லாம், விடுதலை பெற்று வாழும்போது, இந்தப் பெருந் திராவிடம் தனித்து ஏன் இயங்க முடியாது? இதைவிட வசதியற்ற 'அரேபியா' வாழவில்லையா? பனிப் பாறைகள் நிறைந்த 'ஸ்காண்டிநேவியா' வாழவில்லையா? எல்லா வளமும் இருந்து ஏன் நாம் வாழ முடியவில்லை? அவர்கள் அறிவைப் பயன்படுத்துகின்றனர்—நாம் அங்கே தவறிவிடுகிறோம்.

வள்ளுவர் கூறியதுபோல,

"அறிவுடையார் எல்லாம் உடையர்—
அறிவிலார் என்னுடையரேனும் இலர்"

என்ற கருத்துப்படி, வசதிகள் அற்றும், அறிவின் துணைகொண்டு அவர்கள் வாழ்கிறார்கள்—நாம் அறிவைப் பயன்படுத்தாத காரணத்தால், வளமிருந்தும் வாடுகிறோம்.

"இங்கு இரும்பு இரும்பாகவே இருக்கிறது. இங்கிருந்து 1—8—0-க்கு வாங்கிய இரும்பு மேல் நாட்டிற்குச் சென்று அறிவின் திறத்தால், அது, திரும்ப ஒலிபெருக்கியாக ரூ 2000-க்கு விற்கப்படுகிறது. நீர்வளம், நிலவளம் நிறைந்த நாடாக இது இருந்தபோதிலும், வசதியற்று வாடுகிறோம்.

"1951-ம் ஆண்டு, சென்சஸ் புள்ளி விவரப்படி, இந்த நாட்டிலே படித்தவர்கள், 100-க்கு, 16 பேர்தான்! மீதி 84 பேர்கள் தற்குறிகள். எந்த நாட்டிலே இந்தக் கொடுமை?—சைவனும், வைஷ்ணவனும், மடாதிபதியும், பார்ப்பான்களும், ஆஸ்திக அன்பர்களும் நிறைந்த இந்த நாட்டிலேதான்!

"நாஸ்திகர்களாகிய நாங்கள் மட்டும் இருந்து, எங்களிடத்தில் இந்த இழிநிலை இருந்தால், அது தவறாகாது! ஆஸ்திக அன்பர்கள்—ஆண்டவனோடு அடிக்கடி பேசுகிற இவர்கள் நாட்டிலே இந்தக் கொடுமை இருக்கலாமா?

"நாஸ்திகத்தை வளரவிடமாட்டோம் — பகுத்தறிவைப் பரவவிட மாட்டோம்—என்று பேசும் இவர்கள் ஆட்சியிலேதான், 100-க்கு 84 பேர் படிக்காதவர்கள்! இது கண்டு அவர்கட்கு வெட்கமில்லையா? படிப்பிலே மட்டுமல்ல— 'லட்சுமி' கடாட்சம் எந்த அளவு இருக்கிறது பாருங்கள்!

"ஒரு மனிதனின் சராசரி வருமானம் ஒரு ஆண்டுக்கு, அவர்களின் கணக்குப்படி 345¼ நாள் உழைத்தால், ஒரு தனி மனிதனின் சராசரி வருமானம் 240 ரூபாய்தான். சுமார் 200, 300 ஆண்டுகளுக்கு முன்பு உலகிலே காடு—கரம்பு நாடு என்று கருதப்பட்ட அமெரிக்கா, இன்று இந்தியாவோடு உறவாடலாமா? —சீனாவிலிருந்து பொன்னைச் சுரண்டி, டாலர் ஏகாதிபத்தியத்தால், எந்தெந்த நாடுகளைத் தன் பக்கம் வலை போடலாம்—மேலும் மேலும் எப்படிப் பணத்தை குவிக்கலாம்—என்று கணக்குப் போடுகிறது—உலக மார்க்கெட்டுகளிலே, தனக்கு நிகர் அற்று வாழ ஆசைப்படுகிறது. நாமோ 100-க்கு 14 பேர்தான் படித்தவர்கள்! இந்த அவல நிலையிலே, ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம் புகுத்தப்படுவது சரியா?

"அறிவை விஞ்ஞானத்தோடு இணைத்து மேலை நாட்டான் வளருகிறான்! ஆச்சாரியாரோ அவரவர்களின் குலத் தொழில்படி, 'வண்ணை செய்—கூடை முடை— குடிசைத் தொழிலைக் கற்றுக்கொள்— என்கிறார்! இதுதான், இந்த நாடு உருப்பட வழியா?

"இப்போது, கடைசியாக அவர் தன் கல்வித் திட்டம் பற்றிக் குறிப்பிடுவதெல்லாம், அதிக மாணவர்கள் படிக்க வசதியே தவிர, இந்த 'ஷிப்டு' முறையே தவிர, வேறொன்றுமில்லை என்கிறார். 6 மணி நேரத்தை 3 மணி நேரமாக்கியதற்கு இதுவா காரணம்? 87 லட்சம் பேரிலே, 40 லட்சம் பேர் படிக்க முடியவில்லை என்றால், நேரம் போதவில்லை என்பதுதான் காரணமா? வறுமை—பஞ்சம், பட்டினி, இவை அல்லவா?

"குழந்தையைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டுமானால், அவனுக்குக் கட்டி அனுப்ப ஒரு துண்டுவேண்டுமே—ஒரு பலகை வாங்கித் தர வேண்டுமே—பாட்டத் தலையில் ஒரு சொட்டு எண்ணை தடவ வேண்டுமே பள்ளிக்கூடத்திற்குச் சம்பளம் கட்ட காசு இல்லையே என்பதல்லவா, வெளியே இருக்கிற குழந்தைகள், உள்ளே நுழைய முடியாமல் இருப்பதற்கு காரணமாகும்? ஆச்சாரியாரின் காரணம் சரியா? பொருந்துமா? எனவே, திராவிடரின் மேல்கல்வியை தடை செய்யவே அவருடைய ஏற்பாடு இது என்பது தெளிவாகிறது.

"'ஷிப்டு' முறை வைத்ததற்கு ஆச்சாரியார் காரணம் சொல்லுகையில், 'குழந்தைகளிடத்திலே நெருக்கடி ஏற்பட்டுள்ளதைத் தளர்க்கத்தான்,' என்கிறார். என்ன நெருக்கடி? கிராமங்களிலே இருப்பது ஒரு பள்ளி; அதிலே இருப்பது 5 பெஞ்சுகள்; ஒரு ஆசிரியர், 5×2-10 என்று மாணவர்கள் அமர்ந்திருக்கின்றனர்; இடம் போதவில்லை, படிக்க மாணவர்கள் 'கியூ' வரிசையில் நிற்கின்றனர்; அரசாங்கத்தால் மேலும் பொருள் செலவிட்டு, இடத்தைக் கட்டவோ, இன்னும் பல ஆசிரியர்களைச் சேர்க்கவோ முடியவில்லை; எனவே தான் 'ஷிப்டு' முறை என்றால் நியாயம். கிராமங்களில் இன்று இதுவா நிலை?"

"'அட்டெண்டென்ஸ்' ரிஜிஸ்தரிலே குறிப்பிட்டிருப்பது 42 பிள்ளைகளென்றால், வருவது 12, 13 பேர்! இன்ஸ்பெக்டர் வருவார் என்று தெரிந்தால், ஆசிரியர், வீடு வீடாகச்சென்று 'நாளைக்கு மட்டும், அவசியம் உங்கள் குழந்தையைத் தவறாது அனுப்பிவையுங்கள்; இல்லையென்றால், இப்பள்ளியை இழுத்து மூடி விடுவார்; என் பிழைப்பும் போய் விடும்' என்றுதானே கதறுகிறார்? இதுதானே இன்றைய நிலைமை? வீட்டுக்கு வீடு வாத்தியார் போகிறாரா? அல்லது மாணவர்கள் 'ஓவர்புலோ' வாகி— வழிந்து நிற்கிறார்களா?"

"சட்டசபையிலே மந்திரி சுப்ரமணியம் பேசினார் — இத்திட்டத்தை, சட்டசபை அங்கத்தினர்களைக் கலந்துபேசிக் கொண்டு வாராதது தவறு என்றால், எங்களை மன்னித்து விடுங்கள்,' என்று! இவ்வளவு நாள் பிடித்ததா இதற்கு? எதனுடைய விளைவு இது? எந்தத் தாக்குதலின் அதிர்ச்சியால் ஏற்பட்ட ஞானம் இது? மன்னிப்பு கேட்பது இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது; இது ஒன்று மட்டுமல்ல—இதிலே நீங்கள் மன்னிப்புக் கேட்கவேண்டியிருப்பது ஏராளம்! ஏராளம்!

"இதுபற்றி, இந்தப் பகுதியிலே உள்ள திருவள்ளுவர் முன்னணிக் கழகத்தினர் ஆச்சாரியாருக்கு ஒரு கடிதம் எழுதினர். அதாவது —'புதிய கல்வித் திட்டத்தால் பொது மக்களுக்கு லாபம் என்று நீங்கள் கூறுகிறீர்; தி. மு. கழகமோ, 'அது தீது' என்கிறது. எனவே, பொது மக்களாகிய நாங்கள் குழப்பம் அடைகின்றோம்; எனவே, எங்களுக்குத் தெளிவு ஏற்பட ஒரே மேடையில் இப்பிரச்னை பற்றி நீங்கள் குறிப்பிடுகிற இடத்தில், தேதியில் தோழர் அண்ணாதுரையும் நீங்களும் பேசவேண்டும். டிக்கட் போட்டே இதனை நடத்துவோம். வருகிற பணத்தில் 25 சதவிகிதத்தை அரசாங்கத்திற்கு நன்கொடை அளிக்கிறோம்; செலவையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்,' என்று!—அதற்கும் பதில் தரும் முறையில், அசோகச் சக்கர முத்திரையிட்ட தாளில், ஆச்சாரியாரின் பர்சனல் செகரட்டரி தோழர் ஜி. ராமச்சந்திரன் எழுதியுள்ளார்—'ஸ்ரீ செகரடரி, திருவள்ளுவர் முன்னணிக் கழகம்; தங்கள் 14—12—53-ம் தேதி கடிதம் கிடைக்கப்பெற்றது. உங்கள் கடிதத்தில் உள்ள வேண்டுகோளுக்கு இணங்க முடியாத நிலையில் அவர் இருக்கிறார்; அதற்கான வருத்தத்தை என் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறார்.—இப்படிக்கு முதல மந்திரியாரின் பர்சனல் செகரட்டரி ஜி. ராமச்சந்திரன்.'

"நாம் ஜனநாயகத்தை மதிக்காதவர்கள் என்று தூற்றப்படுகிறோம், மாற்றாரால்!—தோழர்களே! காங்கிரஸ் நண்பர்களே! உங்களைக் கேட்கிறேன் — இதற்கு என்ன சொல்லுகிறீர்? ஜனநாயக முறையைப் பின்பற்றும் ஆச்சாரியாரின் கடிதம் இதுதான் என்றால், அவர்களின் கொள்கை, சொத்தை - சோடை என்றுதானே பொருளாகும்?

"நீதியும், நேர்மையும் கொண்ட நாட்டு மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள் என்பது உறுதி."

கழகக் கூட்டங்கள்

★

கிழப்பெரும்பள்ளம்
30—12—53 புதன்
தலைவர்: மருதவாணம்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
வி. ஏ. பாண்டியன்

★

சேலம்
'V' மார்க்கெட்டில்
30—12—53 புதன்
பேசுவோர்:
மு. கருணாநிதி
கண்ணதாசன்
பி. கே. வரதராஜுலு
சி. கே. கிருஷ்ணன்

★

சென்னை
திருவல்லிக்கேணி பாண்டியன் படிப்பக ஆண்டு விழா
1—1—54 வெள்ளி மாலை
இடம்:
திருவல்லிக்கேணி கடற்கரை
தலைவர்: என். வி. நடராசன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
எஸ். எஸ். ராஜேந்திரன்

திருப்பூர் நாடக மன்ற அமைப்புக் கூட்டம்

திருப்பூர் நாடக மன்றத்தின் அமைப்புக் கூட்டம், 1-1-54 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். அதுபோது 'இரு உள்ளம்' எனும் நாடக அரங்கேற்றம் குறித்து முடிவு காணப்படும். தோழர்கள் அ. ச. இளங்கோ, எம். என். அண்ணா, சிந்தனைச் செல்வன் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு!

★

அலுவலக அச்சு இயந்திரத்தில், நேற்றிரவு திடீரென்று கோளாறு ஏற்பட்டு விட்டமையால், நேற்று, ஒரு சில ஏஜெண்டுகளுக்குக் குறித்த நேரத்தில் பத்திரிகை அனுப்ப இயலவில்லை. இன்னும் இரண்டொரு நாட்களில் இயந்திரம் பழுது பார்க்கப்பட்டு, வழக்கம்போல் ஒழுங்காகப் பத்திரிகைகள் அனுப்பப்படும். ஏஜெண்டுத் தோழர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

பொறுப்பாளர்
29—12—53

கம்யூனிஸ்டு கட்சிக்கு இரு செயலாளர்கள்?

போட்டியைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடு!

மதுரை, டிச. 28—

இங்கு நடைபெறும் அகில இந்திய கம்யூனிஸ்டு மூன்றாவது மாநாட்டில் பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டி இருக்கிறது.

இதற்கு இப்பொழுது செயலாளராக உள்ள தோழர் அஜாய் குமார் கோஷ் அவர்களுக்கு தோழர் பி. ஜி. ஜோஷி அவர்களின் போட்டி இருக்குமென்று நம்பப்படுகிறது.

போட்டியைத் தவிர்க்க இருவரையுமே செயலாளர்களாக ஏற்றுக்கொள்ளுவது என்று மாநாட்டுப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் விரும்புகிறதாகத் தெரியவருகிறது.

போபால் சட்ட சபைத் தலைவர் ராஜிநாமா

நிதி மந்திரியும் விலகுவார்

இந்தூர், டிச. 28—

போபால் சட்ட சபைத் தலைவர் சுல்தான் முகம்மதுகான், மத்திய பாரத் பிரதேசக் கமிட்டி காங்கிரஸ் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார்.

அவர், அரசியல் விவகாரங்களில் கலந்து கொள்ள நேரு அனுமதிக்காததே, இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

இதுபோலவே காலைய பகுதிகளுக்கு போபால் நிதி மந்திரியும் ராஜிநாமா செய்துவிடப் போவதாகத் தெரிகிறது.

கிழப்பூங்குடி—பாகனேரி

30—12—53 மாலை 4-30 மணிக்கு கிழப்பூங்குடியில் தோழர் திருஞானம் தலைமையிலும், இரவு 8-மணிக்கு தோழர் இராமு. செங்குட்டுவன் தலைமையில் பாகனேரியிலும் தோழியர் அருள்மொழி, பூங்கோதை, க. சத்தியேந்திரன் ஆகியோர் பேசுவர்.

பொங்கல் வாழ்த்துகள்

அண்ணா, பெரியார், திரு. வி. க., கருணாநிதி, பாரதிதாசன், மற்றும் தி. மு. க தலைவர்கள் உருவங்கள் அமைந்த பொங்கல் வாழ்த்துகள் மூவர்ண கலர்களில் பல டிசைன்களில் புரட்சிக் கவிதைகளுடன் வெளியிட்டுள்ளோம்.

விற்பனையாளர்கள் தேவை.

இரண்டணா தபால் தலை அனுப்பினால் ஒரு செட் மாதிரி வாழ்த்துகளும், விலை விபரங்களும் அனுப்பி வைக்கப்படும்.

பகலவன் பாசறை,
61, அருணாசல [illegible] தெரு,
சென்னை—[illegible].

"கல்லக்குடி அறப்போர்—வடவரின் சுரண்டல் எதிர்ப்புக்கும் ஓர் காரணந்தான்!"

—(:)—

'சுகவாழ்வு மட்டுமல்ல; சுயமரியாதையும் தேவை என்பதே நமது இலட்சியம்!'

—(:)—

தி. மு. கழக ஆண்டு விழாவில் தோழர் மு. கருணாநிதி

அறப்போராட்ட விளக்கம்

சென்னை, டிச. 29—

"பொருளாதாரத் துறையில் நமது போராட்டம், டால்மியாபுரம் பெயர் மாற்றப் போர்—அது 'டால்மியாபுரத்தை,' 'கல்லக்குடி'யாக மாற்று என்று சொல்லும் வெறும் பெயர் மாற்றப் போராயிருந்தால், என்றோ சர்க்கார் மாற்றியிருக்குமே! ஆனால், இந்தப் பெயர் மாற்றத்தில் பெரியதொரு பொருளாதாரப் பிரச்னையும் இருக்கிறதென்பதை பிறரைக் காட்டிலும், சர்க்கார் நன்கு உணர்ந்திருக்கிறது. டால்மியாபுரம் என்ற பெயர் எடுக்கப்பட்டால், இவ்விடத்தில், வடநாட்டுப் பொருளாதாரச் சுரண்டல் எடுபட்டதாகும்; எனவேதான், சர்க்கார் தயங்குகிறது! இருந்தும், இன்று, அங்கு 'டால்மியாபுரம்' இல்லை; 'கல்லக்குடி'தான் காட்சியளிக்கிறது.

"சிலர் உணவை மட்டும் கவனிக்கின்றனர்—நாம், உணவோடு மானம் காக்கும் உடையும் தேவையென்கிறோம். திராவிட சமுதாயம், சாக்கடைக்குள் கிடக்கும் மனிதனைப்போன்றது. பசிக்கிற அவனுக்கு, உணவு கொடுப்பதுடன், அவனை சாக்கடையிலிருந்து தூக்கி, சுத்தம் செய்ய வேண்டுமென்கிறோம். ஆனால், சிலர் சாக்கடைக்குள்ளிருப்பவன் அங்கேயே இருக்கட்டும்—சாப்பாடு மட்டும் அவனுக்குப் போதும் என்கிறார்கள்."

—இவ்வாறு, 27-12-53-ல், சென்னை இராயப்பேட்டை, 37வது வட்ட தி. மு. கழக ஆண்டு விழாவில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், தோழர் கருணாநிதி குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"தாயகத்திற்கு ஏற்பட்டுள்ள அவமானச் சின்னங்களை அழித்தொழிக்க தி. மு. கழகப் பொதுக் குழுவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு களம் புகுந்து வெற்றி கொண்டவர்களில் நானும் ஒருவன் என்ற பூரிப்புடன் உங்கள்முன் நிற்கிறேன். மீண்டும், இத்தகு களங்களிலே குதிக்கத் தூண்டுபவைதான், இவ்வரவேற்புகள், என்று நான் நினைக்கின்றேன்.

"சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய இம்மூன்று கொள்கைகளையும், அடிப்படையாக வைத்துத்தான் மும்முனைப் போராட்டங்களை நமது தி. மு. கழகம் நடத்தியது. அரசியல் போராட்டந்தான் ரயில் நிறுத்தப் போராட்டம். நமது இளர்ச்சிகளை 'நான்சென்ஸ்' என்று இழிவாகப் பேசினார்—அரசியல் ஆதிக்கம்—தென்னாட்டின் பிடி தன்னிடமிருக்கிறதென்ற கனத்தால்! வெகுண்டெழுந்தது தமிழகம்—'வடநாட்டுக் கனக விசயன்' நேருவின் இழிமொழியைக் கண்டிக்க, அவர்தம் அரசியல் ஆதிக்கத்தை உடைத்தெறிய, நிறுத்தப்பட்டன ரயில்கள்—சென்றனர் சிறைக்குள் ஐயாயிரவர்—அமெரிக்கரும், ஆங்கிலேயரும் கண்டு திகைக்கும் வகையில்!

"சமுதாயத் துறையில்—நமது சமுதாயத்தை என்றென்றைக்கும் தாழ்த்தி வைக்க—முன்னேற முடியாமற் செய்ய சதி செய்து புகுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத்தை புதைகுழிக்கு அனுப்புவதற்குத்தான், கொண்டு வந்த ஆச்சாரியார் வீட்டு முன் மறியல் செய்ய போர்த் தலைமை பூண்டு புறப்பட்டார் சம்பத். களம் புகுமுன் கைது செய்யப்பட்டார், அன்னவுடனும், இராருடனும்! அந்தப் போர் முடிவு பெறவில்லை. உயர்நீதி மன்றத்தில், மறியல் பற்றிய வழக்கில் வெற்றிப் பெற்றதும் மீண்டும் துவங்குவோம்—அதை விட்ட இடத்திலிருந்து!

இந்த முப்பெரும் போராட்டங்களில், பலரின் கரங்கள், பலரின் கால்கள், கண்கள், அருமைமிகு உயிர்கள் பலி கொள்ளப்பட்டன — இந்த 'வந்தே மாதர' சர்க்காரால்! இத்தகைய அடக்குமுறைக்கும் பிறகும் நாம் அழியவில்லை—அழிக்க நினைக்கிறார் ஆச்சாரியார்—தூத்துக்குடி சதி வழக்கின் மூலமாக! அவரின் அந்த எண்ணத்தில் மண் விழ உங்களாலானதை எல்லாம் செய்யுங்கள்."

குடந்தைக் கிளை தி. மா. மு. கழகம்

20—12—53-ல் நடைபெற்ற செயற்குழுவில் புத்தாண்டிற்கு, தோழர்கள்: வை. கி. பன்னீர்செல்வம் செயலாளராகவும், [illegible] துணைச் செயலாளராகவும், கே. ஆர். என் ராசன் பொருளாளராகவும், என். இராதாகிருட்டினன் விளம்பர உதவியாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், சிறை மீண்ட தலைவர்கட்கு வரவேற்பளிக்க தீர்மானிக்கப்பட்டது.

'நாகரீக' மக்கள் நேருவுக்கு அளித்த நல்வரவேற்பு!

'திரும்பிப் போ' 'திரும்பிப் போ' என்ற ஒலி அவர் காதைத் துளைத்தது!

பஞ்சாப் மாநிலக் கோரிக்கையினர் ஜவகருக்கு படைத்த படையல்

பாட்டியாலா, டிச. 27—

இங்கிருந்து சுமார் 35 மைல் தொலைவிலுள்ள குருத்வார் என்ற இடத்தில், இந்தியப் பிரதமர் பண்டித நேரு, இன்று காலையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேச எழுந்ததும கிளர்ச்சிக்காரர்கள் கூச்சலிட்டு, பேச முடியாது தடுக்கப்பட்டார். கிளர்ச்சிக்காரர்கள் பஞ்சாபி மொழி பேசும் ராஜ்ய அமைக்கக் கோரியும், ஆலோசகர் ஆட்சியை மாற்றக் கோரியும் கோஷங்கள் எழுப்பியதுடன், பிரதமர் நேருவைப் பேச அனுமதிக்க மாட்டோம் எனவும் கூறினர். அகாலி தலைவர் மாஸ்டர் தாரா சிங், கிளர்ச்சி துவங்கிய சில நேரத்தில், மேடை மீது ஏறினார். பெப்சு ராஜ்பிரமுகர், அயரிடம், கிளர்ச்சிக்காரர்கள் அமைதியைக் கடைப்பிடிக்கும்படி கூறவேண்டுமென வேண்டினார். ஆனால் மாஸ்டர் தாரா சிங் குருத்வார் மேடையில் நேருவைப் பேச அனுமதிக்க மாட்டோம் என்று கூறினார்

கிளர்ச்சிக்காரர்களில் சிலர் நேருவுக்கு பக்கத்திலே பிரதம மந்திரி நோக்கி வந்தனர். அவர்களை, ராஜப்பிரமுகரும், அதிகாரிகளும், போலீசாரும் தடுத்து நிறுத்த முயன்றனர். பாதுகாப்புப் போலீசார், பிரதமரையும் ராஜப்பிரமுகரையும் சுற்றி வட்டமிட்டுக்கொண்டனர். கிளர்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே அவர்கள் இருவரும் குருத்வாராவைவிட்டு அகன்றனர். பிரதமர் சென்றவுடன் கூட்டம் மத்திய அரசாங்க வீட்டு வசதி மந்திரி சர்தார் ஸ்வரன் சிங்கிற்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன், அவரது காரையும் தாக்கிச் சென்றனர். பிறகு அவர் கார்மீது கற்களும் வீசப்பட்டன. இதன் விளைவாக 3 போலீசாருக்குக் காயம் ஏற்பட்டது.

பின் கிளர்ச்சி, பலாத்கார உருக்கொண்டது. நூற்றுக்கணக்கானவர்கள் கத்தி, கம்பு, கோடாரிகளுடன் வழியில் போய்க்கொண்டிருந்தவரையெல்லாம் தாக்க ஆரம்பித்தனர். நிலைமை சிறிது நேரத்தில் அமைதியாயிற்று. கிளர்ச்சிக்காரர்கள், 1704-ல் மொகலாய அரசர்களால் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படும் குரு கோவிந்தசிங்கின் இரு குமாரர்களின் நினைவுச் சின்னமாக ஜோதி மேளா நிகழ்ச்சியை ஒட்டி குருத்வாராவிலிருந்து சென்ற ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

இதற்கு முன்னர் குருத்வாரில் பண்டித நேரு வந்ததும், ராஜப் பிரமுகர், ஆலோசகர், பி. என். ராவ், தர்மார்த் போர்டின் தலைவரான சர்தார் குருதயால் சிங் கரிகர் ஆகியோரால் வரவேற்கப்பட்டார். குருத்வாரை, நேருவின் கார் நெருங்கியபோது ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் 'நேரு வாழ்க' என் ஒலித்து மலர் மாலைகள் அணிவித்தனர்.

குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகும் சுலோகங்கள் கோஷிப்பது நிற்காமல்போகவே, ராஜப்பிரமுகர் நிறுத்துமாறு கேட்டார். கூட்டத்திலிருந்த சிலர் எழுந்து "சீக்கியரின் பந்துக்கே வெற்றி" "நேருவே திரும்பிப் போ" "பஞ்சாபி மொழி மாகாணம் அமைத்தே தீருவோம்" என்று ஒலித்தனர்.

பிறகு நேரு இரண்டொரு வாக்கியங்கள் இந்துஸ்தானியில் பேசினார். அவர், குருத்வாரைப் போன்ற வழிபாட்டிற்குரிய இடங்கள், அரசியல் பிரசங்கங்கள் புரிவதற்காக இல்லை என்றார்.

இந்த நிலையில் தாரா சிங் தோன்றி, ராஜப் பிரமுகரிடம், தான் நேருவைப் பேச அனுமதிக்கப்போவதில்லையென வாதாடினார்.

ராஜப் பிரமுகர், பண்டிதர் வருமுன், கூட்டத்தினரை, வருகிற நேருவுக்கு மரியாதை தரும் முகத்தான் அவர் பேச்சை அமைதியாகக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

—'மெயில்' 27—12—53.

வானளாவ உயர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர்; சிறிது அச்சத்தோடு சிலரும், ஆச்சரியத்தோடு சிலரும், நம்மைப் பார்க்கும் போதெல்லாம் விளக்கம் கேட்டுத் தெளிவு பெற ஆரம்பித்துள்ளனர்."

"அதற்குக் காரணம்—நம் பேச்சிலுள்ள வசீகரமல்ல; அழகல்ல; அடுக்கு மொழிகளும் அல்ல; ஆனால், நம் கொள்கைகள், ஆழ்ந்த கருத்துக்கள்—இவை தான்! பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதையும், எவ்வளவு அழகாய்ச் சொன்னாலும், மக்கள் அவற்றை ஏற்றுக் கொள்ள இன்று தயாராக இல்லை என்பதையும் நாம் அறிகிறோம்"

"நாம் யாரென அறிவிக்க கருப்புக் கொடி காட்டினோம், பண்டிதருக்கு! அதைப் பார்த்த அவர், ஏதேதோ பேசியிருக்கிறார் நம்மைப் பற்றி—அச்சம் தந்த ஆத்திரத்தால்! நம்மைப் பற்றியும் அதேபோது புரிந்துகொண்டிருக்கிறதால்தான், வடநாட்டில் பேசும் பொழுதெல்லாம் நம்மைப் பற்றியே பேசுகிறார்."

"வானளாவ வளர்ந்துள்ள நம்மை வாய்ச்-சாலலால அழித்துவிட நினைக்கிறார். முடியுமா?"

பின்னர், நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்கள் ஆர்வமிக்கதோர் சொற்பொழிவாற்றினார்.

பின்னர், தோழர் கருணாநிதி சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்தில், உயர் நீதி மன்றத்தில் அண்ணாதுரை உள்ளிட்ட ஐவர் மீது சர்க்கார் மீண்டும் தொடுத்துள்ள வழக்கையும், தூத்துக்குடி சதி வழக்கையும் உடனடியாக வாபஸ் வாங்கவேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செயலாளர் இளவரசு நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

கல்லக்குடி வழக்கு

திருச்சி, டிச. 26—

இன்று கல்லக்குடி வழக்கு திருச்சி சப்—டிவிஷனல் மாஜிஸ்திரேட் திரு. கே. பி. ராதாகிருஷ்ண மேனன் முன்னிலையில் நடைபெற்றது.

16-வது சாட்சி கன்டோன்மெண்ட் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் குப்புசாமியின் குறுக்கு விசாரணை நடைபெற்றது. இத்துடன் சாட்சிகள் குறுக்கு விசாரணை முடிவுற்றது. வழக்கு 29—12—53 அன்று ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

அன்று எதிர் தரப்பு சாட்சிகளின் விசாரணை நடைபெறும். சாட்சிகளாகத், தோழர்கள் கருணாநிதி, ஈ. வி. கே. சம்பத், இரா. நெடுஞ்செழியன் மற்றும் பலர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்த வழக்கு 1—1—54, 4-1-54, 5-1 54 ஆகிய மூன்று நாட்களிலும் நடைபெறும். எம். எல். ஏ.,க்களும், மற்றும் பல முக்கியஸ்தர்களும், 3 நாட்களிலும் சாட்சிகளாக வரவழைக்கப்படுவார்கள்.

இந்திய மக்களின் இன்றைய நிலைமை

சென்னை, டிச 28—

"இந்தியாவில் இப்பொழுது மலேரியா, டைபாய்டு க்ஷயம், சல்களும், மக்கள் உட்கொள்ளும் உணவில் போதிய புரதம், வைட்டமின் இல்லாததன் பொறுப்பில் ஏற்படும் நோய்களும் அதிகமாக காணப்படுகின்றன," என்று பிரிட்டிஷ் மருத்துவப் பேராசிரியர் கூறியுள்ளார்.

"மக்கள் உட்கொள்ளும் உணவில் ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறையைத் தீர்ப்பதுடன், மலேரியா, டைபாய்டு போன்ற காய்ச்சல்களுக்கு குறைவான விலையில் மருந்து விற்பனை செய்ய சர்க்கார் முன்வரவேண்டும்," என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

தேனீர் விருந்தும் பொதுக்கூட்டமும்

கொழும்பு, டிச. 28—

மாணவர் மறுமலர்ச்சி மன்றத்தின் ஆதரவில், 19-12-53ல், தமிழகத்திலிருந்து வந்திருக்கும் சென்னை மாணவர் இராம-இராமநாதன், தோழர்கள் காத்தமுத்து இளஞ்செழியன் ஆகியோர்கட்கு தோழர் சபா. நடேசன் தலைமையில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. பின்னர் நாராயணகுரு மண்டபத்தில், தோழர் மா. சே. அருள் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், தோழர்கள் இராம. இராமநாதன், சந்திரசேகரம், தோழியர் கமல தோழர் காத்தமுத்து இளஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

புதுடில்லி, டிச. 28—

அடுத்த பிப்ரவரி, மார்ச் மாதங்களில் திருவாங்கூர்-கொச்சியில் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இதில் போட்டியிட இருக்கும் 117 பேர் கொண்ட பட்டியலை, பண்டித நேரு பரிசீலனை செய்து வருகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டுப் பெற்று (24, குறுக்கு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,